MADRAS

ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

ஆகஸ்ட் 1952

சுகாதார மந்திரி பேசிவிட்டார்	2
சின்னக் கருப்பனும்—ஹோமியோபதியரும்	7
E. B. நாஷ் அவர்களின் லீடர்ஸ் இன் திராபூடிக்ஸ்	12
நக்ஸ்வாமிகா	13
மதிப்புரை ...	22
நெல்லை ஜில்லா ஹோமியோபதியர்களுக்கு வேண்டுகோள்	23
கேள்வியும் பதிலும்	24

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஔஷதங்கள்

1 முதல் 24 ஔஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் கும்பகோணம்

ஹோமியோபதி

VOL. 6 — 1952 ஆகஸ்ட் — No. 8

சுகாதார மந்திரி பேசிவிட்டார்!

சில தினங்களுக்கு முன் சென்னை சட்டசபையில், "ஹோமியோபதி வைத்திய முறையை அங்கீகாரம் செய்து ஹோமியோபதி டாக்டர்களை ரிஜிஸ்டர் செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?" என்ற கேள்விக்கு நமது சுகாதார மந்திரி கனம் ஷெட்டி அவர்கள் "இல்லை" என்று தெட்டென பதில் கொடுத்தார். மற்ற மாகாணங்களில் ஹோமியோபதிக்கு அங்கீகாரம் அளித்து சட்டங்கள் இயற்றி இருக்கும்போது நமது மாகாணத்தில் மாத்திரம் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது என்ற கேள்விக்கு, "மத்திய சர்க்கார் ஹோமியோபதி சம்பந்தமாக ஒரு கமிட்டியை நிருவி இருப்பதாகவும், தான் மத்திய அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்பார்த்திருப்பதாகவும்" தெரிவித்தார். தன்னுடைய தொகுதியில் சென்ற முப்பது வருடங்களாக, மிக நல்ல முறையில், ஸ்தலஸ்தாபனத்தாரால் நடத்தப்பட்டு வரும் ஒரு ஹோமியோபதி வைத்தியசாலையைப் பார்த்துக்கொண்டே இருக்கும் ஒரு அங்கத்தினர், ஹோமியோபதி வைத்திய முறையை அரசாங்கம் அங்கீகரிக்காததற்குக் காரணம் என்ன வென்று கேட்டதற்கு, நமது மந்திரியார், ஹோமியோபதி டாக்டர்களாகத் தொழில் நடத்துபவர்கள், ஒரு பெட்டி ஔஷதமும், ஒரு புத்தகமும்தான் வைத்திருக்கிறார்கள் என்றும், அதனால் அவர்களை ரிஜிஸ்டர் செய்ய முடியாது என்றும் மிக அலட்சியமாகப் பதில் தந்துவிட்டார். இந்த நிலைமையில் எதிர்க்கட்சித் தலைவர், "அரசாங்கம், ஹோமியோபதிக்கு சலுகைகள் கொடுக்காவிட்டாலும், அதை இழிவாகப் பேசாமலாவது இருக்கக்கூடாதா?" வென்று கேட்டதற்கு, நமது முதல் மந்திரியே இடைமறித்து, ஷெட்டியார் பதில்கள் ஹோமியோபதியை இழிவு படுத்தவில்லை என்றும், "ஹோமியோபதி டாக்டர்களாக இன்று இருப்பவர்களில் பெரும்பாலோர் சரியான முறையில் பயிற்சி பெற்றிருக்கவில்லை" என்றுதான் அவர் சொன்னார் என்றும் தெரிவித்தார். மிகவும் மரியாதையான பதில்!

இந்த சட்டசபைக் கேள்வி பதில்கள் நம் மாகாணத்திலுள்ள பல ஹோமியோபதியர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. ஆனால் நமது சகோதரர்கள் அவ்வாறு ஏமாற்றமோ ஆத்திரமோ அடைய யாதொரு காரணமுமில்லை என்பது நமது அபிப்பிராயம்.

முதலாவதாக நமது மாஹாணத்தின் சுகாதார மந்திரி பழைய மந்திரி சபையிலும் அதே பதவியை வகித்து, அனைவரிடமும் நல்ல பெயர் பெற்றதின் காரணமாக, பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று மறுபடியும் அமைச்சராகவும் ஆகி இருக்கிறார். இவ்வாறு பலரிடமும் நல்ல பெயர் பெறுபவர்கள் நம்மிடையே மிகமிகக் குறைவு. ஆகவே அவரிடம் அனேக நல்ல அமசங்கள் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இந்த நல்ல அம்சங்களில் ''ஞாபக மறதி''யும் ஒன்றாக இருக்கலாமென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. அனேக சந்தர்ப்பங்களில் இந்த 'ஞாபக மறதி' நல்ல பயன் அளிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. உதாரணமாக ஒருவர் நமக்கு ஒரு கெடுதிசெய்தாரென்றால், அதை நமக்கு இயற்கையாக ஏற்பட்ட மறதியின் காரணத்தால், உடனே மறந்து விடுவோமானால், அதைப்பற்றி நாம் ஒரு முயற்சியும் எடுக்கமாட்டோம். பின் ஒரு காலத்தில் அதே நபரிடம் நமக்கு ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தால் நாமும் தாராளமாக அவரிடம் போவோம், அவரும் நமக்கு வேண்டியதைச் செய்வார்; ஏனெனில் நாம் அவர் செய்த கெடுதியைப் பாராட்டாததினால், அவர் நம்முடைய இந்த மறதியை 'உயர்ந்த பண்பாடு' என்று நினைத்துக்கொண்டிருக்க லாம்; ஆகையால் இந்த ஞாபக மறதி நமக்கு இங்கே கைமேல் பலன் அளித்து விடும். ஆனால் இந்த ஞாபக மறதி இருக்கிறதே அது சில குறிப்பிட்ட விஷயங் களுடன் நின்று விடுவதில்லை! ஆகவே இந்த ஞாபக மறதியின் காரணமாகத்தான் நமது மந்திரி, மத்திய சர்க்கார் நிருவிய ஹோமியோபதி விசாரணைக் கமிட்டி தன் யாதாஸ்தைத் தயாரித்து, மத்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததையும், அரசாங் கம் அதை அச்சிட்டு அனைவருக்கும் (ஸ்ரீமான் ஷெட்டி உள்பட) 1949-ம் வருடத்திலேயே அளித்ததையும் மறந்து விட்டார் போலும். அதுதான் மறந்து விட்டதென்றாலும், 1950-ம் வருடம் அக்டோபர் மீ 31வ புதுடெல்லியில் கூடிய சுகாதார மந்திரிகள் மஹாநாட்டிற்குத் தான் சென்றிருந்ததையும், அங்கு ஹோமி யோபதி விசாரணைக் கமிட்டியின் யாதாஸ்து பரிசிலனைக்கு வந்ததையும், அதைப் பற்றி அங்கு சில தீர்மானங்கள் நிறைவேறியதையும்கூட ஸ்ரீமான் ஷெட்டி மறந்து விட்டார் போலும்! போகட்டும், இந்த மத்திய சர்க்காரின் ஆலோசனை களை யொட்டி சமீபத்தில் பம்பாய் சர்க்காரும், மத்திய மாஹாண சர்க்காரும் ஹோமியோபதி சம்பந்தமாக சட்டங்கள் இயற்றியிருப்பதும் நமது மந்திரியாரின் கவனத்திற்கு வரவில்லைபோலும், ஒரு அரசாங்கம் ஒரு பெரிய வைத்திய முறையைப்பற்றி அதனுடைய கொள்கையை தமக்கு உசிதம் என்று தோன்றும் வகையில் தீர்மானம் செய்வதை நாம் ஆடசேபிக்க முடியாது. ஒரு ஜனநாயக நாட்டில் நாம் எப்பொழுது நமது ஓட்டுகளைக் கொடுத்து ஒருவரைச் சட்டசபை மெம்பராக்கி, அமைச்சராக்கி விட்டோமோ அப்பொழுதே அன்னவர் நமக்கு அளிக்கும் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொள்ளக் கட்டுப்பட்டுத்தான் இருக் கிறோம். ஆனால் அவ்வாறு ஒரு உயர்ந்த பதிவியில் நம்மால் வைக்கப்பட்டி ருக்கும் ஒருவர், தன் வேலையைச் சரிவர செய்யவேண்டுமென்று நாம் எதிர் பார்க்கலாம். தன் இலாகா சம்பந்தப்பட்ட வரையிலாவது நடைமுறையில் நடக்கும் விஷயங்களை அவர் தெரிந்துகொண்டிருக்க வேண்டியது அவசியம். ஆனால் இன்று கேட்கும் கேள்விகளுக்கு ஐந்து வருடத்திற்கு முன் உள்ள

பதில்களைக் கொடுப்பதுதான் அர்த்தமற்ற விஷயமாக இருக்கிறது. இனியாவது ஸ்ரீமான் ஷெட்டியார் இம்மாதிரியான பதில்களைக் கொடுக்கமாட்டார் என்று எதிர்பார்ப்போமாக.

ஸ்ரீமான் மந்திரியார், கொடுத்த மற்றுமொரு பதில் விசித்திரமானது. ஒரு பெட்டி ஔஷதமும், ஒரு புத்தகமும் ஒருவரிடம் இருந்தால் அவர் ஹோமியோபதி டாக்டர் ஆகிவிடுகிறாராம். இதை அவர் எப்படிக் கண்டுபிடித்தார் என்றுதான் நமக்குத் தெரியவில்லை. ஒருக்கால் ஸ்ரீமான் ஷெட்டியார் தான் வழக்கமாகச் செல்லும் ஹோமியோபதியரின் மேஜையின் மேல் எப்பொழுதும் ஒரு பெட்டியும், ஒரு புத்தகமும் இருந்துகொண்டே இருப்பதைப் பார்த்திருக்கலாம். ஆகவே இவைதான் ஒரு ஹோமியோபதி டாக்டருக்குத் தேவையானவை என்ற முடிவிற்கு அவர் வந்திருக்க வேண்டும். இந்த முறையில் பார்க்கும்போது இன்று நம் அல்லோபதி சகோதரர்களில் அனேகர் ஒரு பெட்டி மருந்துகூட வைத்துக்கொள்ளாமல், ஒரு ஸ்டெதெஸ்கோப்பும், ஒரு தர்மாமீட்டரும், இஞ்சக்ஷன் சிரஞ்சும்தான் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தங்களிடம் வரும் நோயாளிகளைப் பரீட்சை செய்து மருந்துச் சீட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். சில சீட்டுகளுக்கு நோயாளிகள் மருந்துக்கடைகளில் மருந்தை வாங்கி உண்ணுகிறார்கள், அல்லது எழுதி இருக்கும் இஞ்சக்ஷனை வாங்கி வருகிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் ஒருவர் அல்லோபதி டாக்டராகத் தொழில் நடத்த ஒரு ஸ்டெதெஸ்கோப்பும் ஒரு தர்மாமீட்டரும்தான் தேவை என்பதை ஸ்ரீமான் ஷெட்டியார் ஒப்புக்கொள்ளுகிறாரா? அப்படி இதை ஒப்புக்கொள்ளாவிட்டால், இந்த சின்னங்களைத் தவிர ''வைத்திய அறிவு'' என்று ஒன்றும் இவர்களிடம் இருக்கிறது என்பதையாவது ஸ்ரீமான் ஷெட்டியார் ஒப்புக்கொள்ளாமல் முடியாதல்லவா? இந்த அறிவு அல்லோபதியருக்குத்தான் இருக்கும் மற்றவர்களுக்கு இருக்காது என்று அவருடைய எண்ணமா?

இன்று நம் மாஹாணத்தில் பல ஆயிரக்கணக்கான ஹோமியோபதியர்கள் தொழில் நடத்தி வருகின்றார்கள். நமது பெரியவையும் சிறியவையுமான கிராமாந்திரங்களில் சிதறிக்கிடக்கும் மக்களுக்கு அரசாங்கம் யாதொரு வைத்திய வசதியும் செய்து கொடுக்கமுடியாமலிருக்கும்போது அவர்களின் அன்றாட வைத்தியத் தேவையை இந்த ஹோமியோபதியர்களே பூர்த்தி செய்து வருகின்றனர். சுகாதார மந்திரியின் கூற்றுப்படி இவ்வாறு வைத்திய உதவி செய்பவர்களில் பெரும்பாலோர் ஒரு பெட்டி மருந்தும் ஒரு புத்தகமும் வைத்திருப்பவரே. எனினும் இவர்கள் பல வருடங்கள் தொடர்ந்து வைத்தியம் செய்துகொண்டுதான் இருக்கின்றார்கள். இவர்களின் வைத்தியத்தினால் பலன் ஏற்படாவிட்டாலோ அல்லது விபரீத பலன்கள் ஏற்பட்டாலோ, பொது மக்கள் இவர்களை விரும்பமாட்டார்கள் என்பது திண்ணம். இந்த நிலைமையில் இவர்கள் தொடர்ந்து வைத்தியம் செய்து வருகின்றார்கள் என்றால் இவர்களின் வைத்தியத்தினால் பலன் ஏற்படுகிறது என்றுதான் ஆகிறது. ஆகவே இவர்களின் சேவையும் சமூகத்திற்குத் தேவைப்படத்தான் செய்கிறது. தவிர

அரசாங்கம் தன்னால் இன்றைய நிலைமையில் பூர்த்திசெய்து வைக்கமுடியாத கிராம வைத்திய சேவையின் பெரும்பகுதியை இவர்கள் செய்து வருகிறார்கள். கனம் ஷெட்டியாரின் கூற்றுப்படி ஒரு பெட்டி ஔஷதமும் ஒரு புத்தகமும் இதற்குப் போதுமென்றால், இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழி தெரியாமல் திண்டாடும் அரசாங்கம், அவ்வாறு வேலையில்லாமல் திண்டாடும் ஒவ்வொருவருக்கும் ஒரு பெட்டி ஔஷதத்தையும் ஒரு புத்தகத்தையும் வாங்கித் தந்து, அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வைத்தியப் பஞ்சத்தையும் ஒருவழியாகத் தீர்த்து விடலாமே?

ஒரு பெட்டி ஔஷதமும், ஒரு புத்தகமும் இருந்தால் மாத்திரம் போதாது. அந்தப் பெட்டியில் நல்ல ஔஷதங்களாக இருக்கவேண்டும், தேவைக்குத் தகுந்த ஔஷதங்கள் இருக்கவேண்டும்; ஒரு புத்தகம், ஒரு ராமாயணமோ, மஹாபாரதமோ இருந்தால் போதாது. ஆனால் அது நல்ல ஹோமியோபதிப் புத்தகமாக இருக்க வேண்டும். இவை இருந்தால மாத்திரம் போதாது; அந்தப் புத்தகத்திலுள்ள விஷயங்களை மனத்தில் வாங்கி, வியாதியஸ்தரைப் பார்த்தவுடன், அவர் குறிகளைக் கொண்டு சரியான ஔஷதத்தைத் தேர்ந்தெடுக்கத் தெரியவேண்டும். இது தெரிந்துவிட்டால், வியாதி நிச்சயமாக நிவர்த்தியாகும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இவ்வாறு வைத்தியம் செய்து அவ்வப்போது தோன்றும் வியாதிகளையும், ஏன் நீடித்த வியாதிகளையும். நிவர்த்தி செய்தால், அது தவறு; ஆனால் ஒரு சிறிய வியாதிக்கும், பல ரூபாய்களைச் செலவு செய்து பலவித பரிசோதனைகள் செய்து, வியாதியை முற்றவைத்து அதன் பிறகு பெரிய சிகிச்சை செய்து தான், ஒன்று சொஸ்தம் செய்யவேண்டும் அல்லது தீர்த்துக் கட்டவேண்டும் என்பது கனம் சுகாதார மந்திரியின் அபிப்பிராயமாக இருக்கலாம். இதைப் பொதுமக்களில் பெரும்பாலோர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

நமது சுகாதார மந்திரிக்கு ஒன்று கூற விரும்புகிறோம். அவர் இன்றே ஒரு நல்ல ஹோமியோபதிப் புத்தகத்தையும் ஒரு மருந்துப் பெட்டியையும் வாங்க வேண்டும். அப்புத்தகத்தை நன்கு படிக்கவேண்டும். அவருக்கும், அவர் வீட்டிலுள்ளவர்களுக்கும் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு உபாதிகளுக்கு அப்புத்தகத்தின் உதவியால் சிகிச்சை செய்து கொள்ளட்டும். இதை அவர் முழுமனதுடன் செய்வாரானால் அவருக்கு உண்மையிலேயே ஹோமியோபதியின் தன்மை நன்கு விளங்கும் என்றும், அவருடைய குடும்பத்தின் வைத்தியச் செலவும் வெகுவாகக் குறைந்துவிடும் என்றும் உறுதி கூற விரும்புகிறோம். தவிர மற்ற முறை ஔஷதங்களை உட்கொண்டாலோ, அல்லது கைதேர்ந்த வைத்தியர் இஞ்சக்ஷன் செய்தாலோ ஏற்படும் ஆபத்துகள், புரத அதிர்ச்சி போன்ற ஆபத்தான அதிர்ச்சிகள் ஹோமியோபதி ஔஷதங்களால ஏற்படாவென்றும் உறுதிகூற விரும்புகிறோம்.

இனியாகிலும் நமது சுகாதார மந்திரியார் ஹோமியோபதியின் உண்மையான தன்மையையும், ஹோமியோபதியர்களின் சேவையையும் நன்கு

விசாரித்து அறிந்துகொண்டு தான் ஹோமியோபதிக்குச் செய்த அநீதிக்கு மாற்று செய்வார் என்று நம்புகிறோம்.

இந்த விஷயத்தில் நமது பிரதமர் ராஜாஜி அவர்கள் இன்று தொழில் நடத்தும் ஹோமியோபதியர்களில் பெரும்பாலோருக்குச் சரியான பயிற்சி இல்லை என்று கூறினர், ஆனல் அவர் தலைமை வகிக்கும் அரசாங்கம் இது வரையில் ஹோமியோபதிக்கு என்ன செய்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறோம். உண்மையாக பாமர மக்களிடையே அனுதாபமுடைய அரசாங்கம் செய்ய வேண்டிய காரியம், நம்து மாகாணத்தில் ஹோமியோபதியும், அரசாங்கத்தின் அபிப்பிராயப்படி இந்த முறையைக் கையாளும் அரைகுறை வைத்தியர்களும், பொது மக்களுக்கு எந்த அளவுக்குச் சேவை செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அதைத் தெரிந்துகொண்ட பிறகு, உண்மையிலேயே அது பிரயோஜனமாக இருந்தால், அதை முன்னேற்ற வேண்டும்; அல்லது அது உபயோகமற்றதென்றால் அதை ஒழித்துக்கட்ட வேண்டும். அஃதில்லாமல் "வாய் புளித்ததோ. மாங்காய் புளித்ததோ" என்னும்படியான வார்த்தைகளைப் பொறுப்புள்ளவர்கள் பேசுவது சமூகத்திற்கே தீங்கிழைப்பதாகும்.

மாபெரும் கண்டனக்கூட்டம்

அன்புடையீர்!

1952-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ந்தேதி ஞாயிறு பகல் 11 மணிக்கு புதுக்கோட்டை சாரதா ஸ்கூலில், சமீபத்தில் சுகாதார அமைச்சர் அசெம்பிளியில் ஹோமியோபதி குறித்துப் பேசியதை எதிர்த்து கண்டனக் கூட்டமும், அகில தமிழ் நாட்டு ஹோமியோபதியர்களுக்கு விருந்துபசாரமும் நடைபெறும்.

புதுக்கோட்டை வழக்கறிஞரும் டெல்லி மக்கள் சபை அங்கத்தினருமான திரு. கே. எம். வல்லத்தரசு B. A., B. L. அவர்களும் மற்றும் பிரபல ஹோமியோபதி அறிஞர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

பகல் உணவு, மாலை சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அனைவரும் வருக.

இங்ஙனம்,
G. L. பிரகாசம்,
பொதுச்செயலாளர்,
அ. த. ஹோ. வை. சங்கம்.

சின்னக் கருப்பனும்—ஹோமியோபதியரும்

(பித்தன் எழுதியது)

(இடம்: ஹோமியோபதியரின் வைத்தியாலை)

ஹோமியோபதியர்: வாருங்கள் சின்னக் கருப்பன். பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. ஏது இவ்வளவு அபூர்வமாக வந்தது? உடம்புக்கு என்ன?

சின்னக்கருப்பன்: ஆமாமுங்க, உடம்புக்கு ஒன்றுமில்லைங்க. ஆனு உங்களை ஒண்ணு கேட்டுக்கிட்டுப் போகலாமுண்ணு வந்தேனுங்க.

ஹோ: அதென்னங்க? ஒண்ணு என்ன, பலது கேட்டாலும் எனக்குத் தெரிந்தால் சொல்லுகிறேன்.

சி. க: சமீபத்திலே பேப்பர்லே பாத்திங்களா?

ஹோ: தினமும் பேப்பர் பாத்துக்கிட்டுதானே இருக்கிறேன். எல்லா விஷயமும்தான் தெரியுது. கொரியா ராஜிப்பேச்சு, காஷ்மீர் வியவகாரம் போன்ற எல்லா விஷயமும்தான் தெரியுது.

சி. க: அதுல்லீங்க; உங்களைப் பத்தி பேப்பர்லே போட்டிருந் திச்சே பாத்திங்களா?

ஹோ: என்னைப் பத்தியா? என்னைப்பத்தி பேப்பரிலே ஏன் போடராங்க? அப்படி என்பேரு பேப்பரிலே வர்ராப்போலே நான் என்ன பெரிய மனுஷனு?

சி. க: அது இல்லேங்க; உங்களைப் பத்தின்னு உங்களையே பத்தி இல்லீங்க; உங்க உமாபதி வைத்தியத்தைப்பத்தி வந்துதே அதைச் சொல்ரேங்க.

ஹோ: அதுவா? பாத்தேனே! நமது சுகாதார மந்திரி சட்ட சபையிலே ஏதோ சொன்னுரே அதைப் பத்தித்தானே கேட்கிறீங்க?

சி. க: ஆமாமுங்க, அதென்னங்க, உமாபதி டாக்டருங்கள்ளாம் ஒரு பொஸ்தகமும், ஒரு மருந்துப் பொட்டியும்தான் வச்சிருக்காங்க, அதுனலே அவுங்களை ரெசிஸ்டர் செய்யமுடியாதுன்னுட்டாரே?

ஹோ: ஆமாம், அப்படித்தான் சொன்னுர். அதினலென்ன?

சி. க: என்னங்க அப்படிச் சொல்றீங்க? அப்ப உங்களை ரெசிஸ்டர் செய்யமாட்டாங்களே?

ஹோ: என்னை ரிஜிஸ்டர் செய்யாவிட்டால் போகட்டுமே; அதற்கு நான் கவலைப்படவில்லையே?

சி. க: அட நீங்க என்னங்க? நீங்க கவலைப்படமாட்டீங்க, எங்க கெதி என்ன ஆவுறதுங்க?

ஹோ: ஐயா, சின்னக் கருப்பரே! இப்பொழுது உமக்கு என்ன வந்துவட்டது?

சி. க: அதில்லேங்க, நம்ப ஊருலே வேறே வைத்தியருங்க கிடையாது, சுற்றுப்புறத்திலே பத்து மைலுக்கு ஆஸ்பத்திரி இல்லை. இந்த நெலமயிலே நீங்களாவது எங்களுக்கு அப்பப்போ வைத்தியம் செஞ்சு வந்திங்க, இப்ப அதுவும் இல்லேன்ன?

ஹோ: இப்ப யாரு உங்களுக்கு வைத்தியம் செய்யமாட்டேன்னுங்க?

சி. க: அதான், மந்திரி சொல்லிவிட்டாருங்களே; அப்ப எப்படி வைத்திபம் செய்வீங்க?

ஹோ: நான் செய்வது இருக்கட்டுங்க; நான் இதுவரையில் வைத்தியம் செய்ததுபோலவே, இனியும் செய்துவந்தால் நீங்க என்னிடம் வைத்தியம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறீர்களா?

சி. க: எங்களுக்கு என்னங்க? இதுவரையில் எங்களை யாரு காப்பாத்தினுங்க; அரசாங்க வைத்தியமா எங்களுக்கு கிடைச்சுதுங்க; நீங்கதானே தகப்பன் மாதிரி இருந்து காப்பாத்தினீங்க. இப்ப மந்திரி சொன்ன விசயத்திலே உங்களுடைய தொழிலுக்கு எங்கே ஆபத்து வருமோ? எங்களுக்கு எங்கே டாக்டர் கிடைக்காமே போயிடுவாங்களோ என்னுல்ல கவலைப்பட்டேனுங்க.

ஹோ: அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது, பயப்படாதீங்க, நீங்க என்னிடம் நம்பிக்கை வைத்து. என்னை வைத்தியம் செய்ய கூப்பிடுகிற வரைக்கும், என் தொழிலுக்கு யாதொரு ஆபத்தும் வராது. உங்களுக்கு வைத்திய பஞ்சமும் வராது.

சி. க: அப்போ அந்த மந்திரி சொன்ன விசயந்தான் என்னங்க?

ஹோ: அப்படி கேளுங்க சொல்றேன். இப்ப எங்க ஹோமியோபதி வைத்தியம் இருக்கே, அதை இன்னமும் நம்ப சர்க்கார் அங்கீகாரம் செய்யல்லே. இப்பொழுது தொழில் நடத்திவருகிற ஹோமியோபதி டாக்டர்களை ரிஜிஸ்டர் செய்யல்லே.

சி. க: சித்தப் பொருங்க; வார்த்தையை மறந்துடாதீங்க. அப்படீன்னு நீங்க எப்படி தொழில் நடத்துரீங்க?

ஹோ: சர்க்காரிலே ஹோமியோபதி டாக்டராக ஒருவரும் தொழில் நடத்தப்படாது என்னு ஏதும் சட்டதிட்டங்கள் இல்லை. அதினால் தொழில் நடத்துகிறோம்.

சி. க: இப்பவே மந்திரி இப்படி பேசிட்டாரே, இனி அப்படி ஒரு சட்டத்தையும் போட்டுட்டாருன்னா என்ன செய்வீங்க?

ஹோ: அது அவ்வளவு சுலபமான காரியமில்லை. நமது கிராமத்தைப்போல இன்னும் எத்தினியோ கிராமங்களிலே, வேறு யாதொரு வைத்திய வசதியுமில்லாத இடங்களிலே எல்லாம் இன்று ஹோமியோபதி டாக்டர்கள்தான் உங்களைப்போன்றவர்களுக்கு வைத்தியம் செய்கிறார்கள். இவர்களையெல்லாம் தொழில் நடத்தக் கூடாது என்று சொல்லிவிட்டால் அரசாங்கத்தாரால் கிராமங்களுக்கு வைத்திய வசதியே செய்து தர முடியாது

சி. க: ஏன் முடியாதுங்க? ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு இங்கிலீசு டாக்டரை அரசாங்கத்துலே போட்டுட்டாப் போவுது.

ஹோ: அது அவ்வளவு சுலபமான காரியமில்லை. ஏனென்றால் அவ்வளவு இங்கிலீஷ் டாக்டருங்க நம்ப தேசத்திலே இல்லை.

சி. க: வருசா வருசந்தான் புதுசு புதுசா பாஸ் பண்ணிப்புட்டு வர்ராங்களே?

ஹோ: வருஷா வருஷம் பாஸ் பண்ணி வரும் எண்ணிக்கை வருஷா வருஷம் இறப்பதினாலும், வேறு காரணங்களாலும் தொழிலை விட்டு வெளியேறும் டாக்டர்களின் எண்ணிக்கைக்கும் அனேகமாக சரியாகிவிடும். அப்படி மிகவும் குறைவான அளவுக்கு அதிகப்படி டாக்டர்கள் உற்பத்தியானாலும், அது நமது ஜனத்தொகை விருத்தியாவதற்குத் தகுந்தபடி இல்லை. ஆகவே தற்சமயம் இருக்கும் நிலைமையில் நமது அரசாங்கம் ஒருக்காலத்திலும் ஜனங்களுக்குத் தேவையான வைத்தியர்களை உற்பத்தி செய்து கொடுக்க முடியாது.

சி. க: அப்பொ இன்னும் பல வைத்திய பள்ளிக்கூடங்களை வெச்சா?

ஹோ: அம்மாதிரி அனேக வைத்தியக் கல்லூரிகளை ஆரம்பித்தால் நல்லதுதான். ஆனால் திரவியக் கோளாறினால், அரசாங்கத்தால் அதையும் செய்யமுடியாது.

சி. க: இது என்னங்க, ஒரு வழியும் இல்லாமே இருக்குது? அப்படீன்னா, உங்களைப்போல ஒத்த உமாபதி டாக்டருங்களை அங்கீகாரம் செய்து நல்ல முறையில் வைத்தியசாலைகளை வெக்கலாமே?

ஹோ: செய்யலாம்தான். ஆனால் இதிலேயும் அரசாங்கத்திற்குப் பல கஷ்டங்கள் இருக்கிறது.

சி. க: அது எப்படிங்க?

ஹோ: ஹோமியோபதி டாக்டர்களை அங்கிகாரம் செய்வதற்கு, அரசாங்கம் முதலில் ஹோமியோபதியை அங்கீகாரம் செய்ய வேண்டும். அப்படி ஹோமியோபதியை அங்கிகாரம் செய்வதென்றால், ஹோமியோபதி ஆஸ்பத்திரிகள், காலேஜுகள் முதலியவைகளை அரசாங்கம் வைக்கவேண்டும். இவைகளை வைப்பதற்குத் தற்சமயம் அரசாங்கத்தால் முடியாதாகையால்தான் நமது மந்திரி அவ்வாறு பேசியிருக்கிறார்.

சி. க: நீங்க பேசறது என்னங்க விசித்திரமாக இருக்குதே? உமாபதி டாக்டருங்களை அங்கிகாரம் செய்வதற்கும், உமாபதி காலேசு வைப்பதற்கும் என்னங்க சம்மந்தம்? இப்ப பம்பாயிலே, மத்திய மாகாணத்திலே, காலேஜு வெச்ச பிறகா, உமாபதி டாக்டருங்களை ரிசிஸ்டர் செய்கிராங்க.

ஹோ: ஆமாம், பம்பாயிலே, ஹோமியோபதி டாக்டர்களை ரிஜிஸ்டர் செய்கிறார்கள். ஆனால் ஹோமியோபதியை முன்னேற்று வதற்காக அப்படிச் செய்யவில்லை. ஹோமியோபதியை சுமார் 20 வருடங்களில் அந்த மாகாணத்தில் ஒழித்துக்கட்டுவதற்காகத்தான் இந்த ரிஜிஸ்டர் நாடகம் போடுகிறார்கள்.

சி. க: நீங்க சொல்லுகிறது ஒண்ணும் விளங்கலீங்களே.

ஹோ: சாதாரண அறிவுள்ளவர்கள் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இது விளங்காதுதான். நன்றாக ஊன்றிக் கவனித்தால் தான் இதிலுள்ள சூது தெரியும்.

சி. க: நீங்கதான் இதை சற்று விளக்கிச் சொல்லுங்களேன்.

ஹோ: அதாவது அங்கே தற்சமயம் தொழில் நடத்தும் ஹோமியோபதியர்களை ரிஜிஸ்டர் செய்துவிடுகிறார்கள். இனி புதிதாக தொழில் நடத்த விரும்புபவர்கள், 4 அல்லது 5 வருடம் காலேஜில் படித்துப் பட்டம் பெற்றால்தான் தொழில் நடத்தலாம் என்று ஏற் படுத்திவிட்டார்கள். அரசாங்கத்தில் அப்படி ஒரு காலேஜ் வைக்கும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. பொதுமக்களில் யாரும், அரசாங்கம் அங்கிகரிக்கும் வகையில் காலேஜ் வைக்கமாட்டார்கள் என்று அவர் களுக்குத் தெரியும். ஆகவே இப்பொழுது ரிஜிஸ்டர் செய்யப்படு பவர்கள் தவிர புதிதாக யாரும் இத்தொழிலுக்கு வரமாட்டார்கள். இப்பொழுது தொழில் நடத்துபவர்களும் சுமார் 20 வருடங்களில் ஒவ்வொருவராக ஒழிந்துவிடுவார்கள். ஆகவே இதிலிருந்து 20 வருடங்களில் அந்த மாகாணத்தில் ஒரு ஹோமியோபதியரும் இருக்க மாட்டார். ஹோமியோபதி என்ற பேச்சே இருக்காது. இவ்வாறு அது ஒழித்துக் கட்டப்படும்.

சி. க: ஆகா! இது பலே வேலையாக இருக்கிறதே! இது அப்படியானல் அங்கிருக்கும் உமாபதி டாக்டருங்க ஏன் இதை ஆட்சேபிக்கவில்லே.

ஹோ: ஒரு காரியத்திற்கு லஞ்சம் கொடுப்பதுபோல் இப்பொழுது இருக்கும் ஹோமியோபதியர்களை ரிஜிஸ்டர் செய்துவிட்டு, அவர்களுக்கு எல்லா சலுகையும் கொடுத்துவிட்டால், அதில் அவர்கள் மெய் மறந்துபோய் வாய்ப் பூட்டு போட்டவர்கள் போல் ஆகிவிட்டார்கள்!

சி. க: அப்பொ நம்ப மாகாணத்திலே நமது சுகாதார மந்திரியார், அதே போல் சட்டம் கொண்டு வராதது நல்லது என்று சொல்லுங்க.

ஹோ: நிச்சயமாக நல்லதுதான். முதலில் அரசாங்கம் ஒரு ஹோமியோபதி கல்லூரியை ஆரம்பித்து வைத்துவிட்டு அதன் பிறகுதான் இம்மாதிரி சட்டம் கொண்டுவர வேண்டும். அரசாங்கம் கல்லூரியை ஆரம்பிக்க முடியாதவரையில், சட்டம் இயற்றக் கூடாது. இதுதான் ஹோமியோபதிக்கு நன்மை. இதைச் செய்யவே நமது மந்திரி அவ்வாறு பேசினுர் என்பது என் அபிப்பிராயம்.

சி. க: அப்ப ரிசிஸ்டர் செய்யாத டாக்டருங்க வைத்தியம் செய்யப்படாதுன்னுட்டா அப்ப என்ன செய்வீங்க?

ஹோ: அது அவ்வளவு இலகுவான காரியமில்லே அதைச் செய்ய அரசாங்கத்தால் முடியாது.

சி. க: அப்ப உங்க அபிப்பிராயப்படி நமது சுகாதார மந்திரி ரொம்ப நல்லவர் என்னு சொல்லுங்க: அவருக்கு உமாபதி வைத்தியத்துக்கிட்டே அனுதாபம் இருக்கு என்னு சொல்லுங்க.

ஹோ: அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

சி. க: ஆகவே, அவர் பேசினதைப் பற்றி சிலர் பீதிப்படுகிறது அனுவசியந்தானே. உங்க தொழில் அதுபாட்டுக்கு நடந்துக்கிட்டு போவும் என்னு சொல்லுங்க.

ஹோ: இதுதான் சரி. சின்னக் கருப்பரே!

சி. க: ரொம்ப சந்தோசமுங்க, நான் போயிட்டு வர்ரேனுங்க. சுகாதார மந்திரி ஷெட்டியாருக்கு ஜே! என்னுகூட சொல்லலாம் போல இருக்குதுங்களே!

ஹோ: ஓ. பேஷாகச் சொல்லுங்க.

E. B. நாஷ் அவர்களின்

லீடர்ஸ் இன் தீராபூடிக்ஸ்

நமது தமிழ் நாட்டு ஹோமியோபதியர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தி ஒன்றை அறிவிக்க விரும்புகிறோம். நமது ஹோமியோபதி நூல்களில், ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பவைகளில், டாக்டர் E. B. நாஷ் அவர்களால் எழுதப்பட்ட "லீடர்ஸ் இன் தீராபூடிக்ஸ்" என்னும் புத்தகம், ஆரம்ப ஹோமியோபதியர்களுக்கும் சரி, அனுபவமுள்ள வைத்தியர்களுக்கும் சரி, மிகவும் உபயோகமுள்ளது. நமக்குத் தெரிந்து ஹோமியோபதி வைத்தியத்தில் மிகப் பிராபல்யம் அடைந்துள்ள பலர் ஆதிகாலத்தில் இப்புத்தகத்தையே ஆதாரமாக வைத்துக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் இப்புத்தகம் டாக்டர் நாஷ் அவர்களால் 1898ம் வருடம் நவம்பர்மீ 5வ எழுதப்பட்டது. அவருடைய ஆயுட்காலத்தில் 4 பதிப்புகள் வெளியாகி, கடைசியாக 1946ம் வருடத்தில் இதன் ஆருவது பதிப்பும், பிலடல்பியா (அமெரிக்கா)விலுள்ள போரிக் & டாபல் கம்பெனியார் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து நமது தமிழ்நாட்டு ஹோமியோபதியர்களுக்கு அளிக்கவேண்டுமென்று எங்களுக்குப் பல வருடங்களாக அவாவுண்டு. இதை அனுசரித்து இப்புத்தகத்தின் காப்பிரைட் சொந்தக்காரர்களான போரிக் & டாபல் கம்பெனியாருடன் பல வருடங்களாகக் கடிதப் போக்குவரத்துகள் செய்ததின் மூலமாக, இப்பொழுது இப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் சுதந்திரத்தை நாங்கள் அடைந்திருக்கிறோம் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இது விஷயமாகத் தமிழ்நாட்டு ஹோமியோபதியர்களின் பூரண ஒத்துழைப்பும் எங்களுக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இப்புத்தகத்தில் டாக்டர் நாஷ் அவர்கள் முதன் முதலாக "நக்ஸ்வாமிகா" என்ற ஔஷதத்தைப்பற்றி எழுதி இருக்கின்றார்கள். இதைத் தமிழாக்கி இந்த இதழில் பிரசுரித்திருக்கிறோம். முழுப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பு வேலையும் துரிதமாக நடைபெறுகின்றது. கூடிய விரைவினில் வெளியிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

V. R. மூர்த்தி

நக்ஸ் வாமிகா

(NUX VOMICA)

(நாஷ் லீடர்ஸ் இன் திராபூடிக்ஸ் மொழிபெயர்ப்பு)

[பிரசுர உரிமை பெற்றது]

தன் விஷயங்களில் கவலையும், அதிஜாக்கிரதையும், வைராக்கியமுள்ளவர்கள்; சடுதியில் கோபம் வரும் சுபாவம்; வன்மமும் விஷமமும் கொண்ட குணமுள்ளவர்கள்; மன உழைப்புள்ளவர்கள் உடலுழைப்பில்லாமல் உட்கார்ந்த இடத்திலேயே இருப்பவர்கள்.

எதிலும் அதிக உணர்ச்சி, குற்றம் கண்டு பிடித்தல், சிறு சப்தமும் பயத்தை உண்டாக்குதல், சாதாரண ஔஷதங்கள் கூட ஒத்துக்கொள்ளாமை, அதிக வாசனை உள்ள இடங்களில் மயக்கம் வருதல், முதலியன.

நரம்புத்துடிப்புகள், கெண்டையேறுதல்கள், வலிப்புகள் < மிருதுவாகத் தொடுதல்.

கடுமையான சுரமிருக்கும்போதும் குளிர், போர்வை சிறிது அகற்றப்பட்டாலும் குளிர் உண்டாகுதல், முகம் நல்ல சிவப்பாக இருத்தல்.

உணர்ச்சியூட்டும் பானங்கள், மயக்கமூட்டும் மருந்துகள், டானிக்குகள், இரகசிய ஔஷதங்கள், முதலியவைகளிலும், பேருண்டிகளிலும் பழக்கப்பட்டவர்கள்.

அடிக்கடி மலத்தூண்டுதல், சில முறை போகாமலுமிருத்தல் அல்லது சிறுகச் சிறுகப் போதல் > மலம் போன பிறகு.

தன்மைகள் :— < போர்வையை அகற்றுவதால், மன உழைப்பால், உண்டிக்குப் பிறகு, குளிர்காற்று, உலர்ந்த பருவம், உணர்ச்சியூட்டும் பானங்கள், காலை 9 மணி; > ஈரமுள்ள மழைக்காலம், கதகதப்பான அறைகள், போர்த்திக் கொள்ளுவதால், மலம் கழிந்த பிறகு.

கெண்டையேறுதல்கள் (ஒரு சிறு துடிப்பு முதல், விட்டு விட்டு வரும் கடுமையான வலிப்புகள் வரை;) **அதிக உணர்ச்சி, நடுக்கம்,** (பயங்கொள்ளித்தனம்) **குளிர்** இவை மூன்றும் இவ்வௌஷதத்தின் முக்கியக் குறிகளாகும்.

கவலையும் சிடுமூஞ்சித்தனமும், இவைகளுடன் தற்கொலை செய்துகொள்ள நினைத்தல், ஆனால் சாவதற்குப் பயப்படுதல்.

மாலை வேளைகளில், படுக்கப்போகும் காலத்திற்குப் பல மணி நேரங்களுக்குமுன் தூக்கம் வருதல்; விடியற்காலை 3 அல்லது 4 மணிக்குத் தூக்கம் வராமல் விழித்திருத்தல்; அதன் பிறகு காலையில் தாமதமாக எழுந்திருக்கும்படி தூக்கம் வருதல்.

தூங்கி எழுந்தவுடன், சோர்வுடனும் பலவீனமாகவும் காணப்படுதல்; அப்பொழுது எல்லா உபத்திரவங்களும் அதிகமாயிருத்தல்.

அன்னகோசம் :— சாப்பிட்டு ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு கல் போட்டது போன்று கனமும் அமுக்க உணர்ச்சியும் (இதுவே சாப்பிட்ட உடனே இருந்தால் ***காலி. பை., நக்ஸ்மாஸ்சாடா***)

வலிப்புகள் பிரக்கினையுடன் இருக்கும்போதே ஏற்படுதல் (***ஸ்ட்ரிக்னைன்***) < கோபம், மனவெழிர்ச்சி, தொடுதல், அசைதல், மலபந்தமும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி ஏற்படுதல் (***ஆண்டி க்ரூடம்.***)

மாதவிடாய் :— அதிக சீக்கிரமாக, ஏராளமாக, அதிக நாள் நீடிப்பதாக; இது நீடித்திருக்கும்போது மற்ற எல்லாக் குறிகளும் அதிகமாதல்.

மனமும் சரீரமும் ஓய்வுற்றிருக்கும்போது ***நக்ஸ்வாமிகா*** வேலை செய்யும். ஆகவே இரவுகளில் கொடுப்பது நலம்; ***சல்பரைக்*** காலையில் கொடுக்க வேண்டும்.

* * * *

இவ்வௌஷதத்தின் அடையாளக் குறிகளைக் கொடுக்கும்போது, கான்ஸ்டேன்டைன் ஹெரிங் என்பவர்:

''ஆகாரத்துடனே அல்லது ஔஷதமாகவோ, இஞ்சி, மிளகு போன்ற சுகந்த வஸ்துக்களை அதிகமாய் உண்ட பிறகும், உஷ்ணமான ஔஷதங்களைப் புசித்த பிறகும் இது தேவைப்படும்.'' ''மேலும், மிக்ஸர்கள், கஷாயங்கள், பச்சிலை மூலிகைகள், மூலிகை மாத்திரைகள் முதலியவைகளை அதிகமாக உட்கொண்டவர்களுக்கும் இது உபயோககரமாக இருக்கும்.''

இப்படிச் சொல்வது பொதுவாக இருக்கின்றது. இம்மாதிரியான கேசுகளுக்கு இது ஔஷதமாக உபயோகப்படும் என்பது உண்மையே. அதாவது இம்மாதிரியான ஔஷதங்கள், சுகந்த வஸ்துக்கள், மாத்திரைகள் முதலியவைகள் அதிகமாக உபயோகிக்கப்பட்டு, அதனால் ஏற்பட்ட குறிகள் ***நக்ஸ்வாமிகா***வின் ஔஷத நிர்ணயத்தில் ஏற்பட்ட குறிகளை ஒத்திருக்குமாயின் இது உபயோகப்படும். மற்றொரு விஷயம் என்னவெனில் மேலே கூறியவைகள் இம்மாதிரியான ஒரு நிலைமையை ஏற்படுத்துகிறது என்பதாகும். இதனால்தான் அனேக ஹோமியோபதி வைத்தியர்கள், அல்லோபதி வைத்தியர்களிடமிருந்து வரும் கேசுகளுக்கு, அக்கேசை பரிசீலனைகூட செய்யாமல், ஒரு வழக்கமாக ***நக்ஸ்வாமி***

காவை முதலில் கொடுப்பது என்று வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனல் இது சாஸ்திரியமான முறையல்ல. நாம் ஒளஷதம் கொடுப்பதற்கு ஒரு சட்டம் இருக்கின்றது; சில கேஸ்களில் **நக்ஸ்வாமிகா**வின் குறிகள் இல்லாமலுமிருக் கலாம்; குறிகளுக்குத் தகுந்த வேறு ஒளஷதம் கொடுக்கப்படவேண்டியும் வரலாம், "இதற்குமுன் என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று எனக்குத் தெரியவில்லை அதனல் **நக்ஸ்வாமிகா** கொடுத்தேன்" என்று சொல்லுவதில் அர்த்தமில்லை. ஏனெனில் நமது **நக்ஸ்வாமிகா** ஏற்கனவே கொடுக்கப்பட்டி ருக்கிற ஒளஷதங்களின் கெட்ட குணங்களை மாற்றவோ, அல்லது அதன் குறிகள் இல்லாத கேஸ்களில் வேலை செய்யவோ மாட்டாது.

இதோ ஹெரிங் அவர்களால் கொடுக்கப்பட்ட இரண்டு துருப்புக் குறிகள் தரப்படுகின்றன. இவை சுபாவத்தைப் பற்றியவை; இருந்தால் **நக்ஸ்வாமிகா** வேலை செய்தே தீரும்.

"அதி உணர்ச்சி (மனத்தில்) குற்றமில்லாத வார்த்தையும் மனத்தைப் புண்படுத்துதல், சிறு சப்தமும் பயத்தை உண்டாக்குதல், கவலை, தன்னை மீறிய உணர்ச்சி, சரியான, சாதாரண ஒளஷதமும் சகிக்க முடியாமை." தவிர "தன் விஷயங்களில் அதிகக் கவலையும், அதிக ஜாக்கிரதையும், வைராக்கியமுள்ளவர் கள், திடீரென்று கோபம் வருதல், அல்லது வன்மமும் விஷமமுமுள்ள மன நிலைமை உள்ளவர்கள்."

இதுதான் "நரம்புத் தளர்ச்சியுள்ளவர்களின் சுபாவம்." அனுபவம் இம் மாதிரியான சுபாவத்தில் ஏற்படும் குறிகளுக்கு இது நல்ல உபயோகமுள்ளது என்பதை நிரூபித்திருக்கிறது. ஆனல் இம்மாதிரியான "நரம்புத் தளர்ச்சி சுபாவத்திற்கு" வேறு பல ஒளஷதங்களும் இருக்கின்றன. உதாரணமாக, **காமோமில்லா, இக்னேஷியா, ஸ்டாபிஸாக்ரியா** முதலியன.

ஆகவே சுபாவத்தை அனுசரித்து மாத்திரம் **நக்ஸ்வாமிகா**வைக் கொடுப் பது உசிதமல்ல. வியாதியஸ்தரின் மொத்தக் குறிகளுக்கும் ஒத்த ஒளஷதமே கொடுக்கப்பட வேண்டும். தவிர நரம்பு சம்பந்தமாக வேறு விதமான குறிகளும் காணப்படலாம். "வீட்டிலேயே உட்கார்ந்து, எப்பொழுதும் படித்துக் கொண்டோ அல்லது உடலுழைப்பு இல்லாமல் மன உழைப்பு மாத்திரம் உள்ள வர்களுக்கு மலபந்தமும், தன் உடல் நிலையைப்பற்றித் தனக்குள்ளேயே கவலைப் பட்டுக்கொண்டிருத்தலும்."

இதே கேசை ஆழ்ந்து கவனிப்போமானல், இம்மாதிரியான நிலைமை ஒரு சிறு காரணத்திலும் மாறி சிடுமூஞ்சித் தனத்தையும் கோபத்தையும் அவர் களிடையே உண்டாக்கலாம். அதாவது முன்சொன்ன நிலைமையே ஏற்படலாம். எப்படியும் முதலில் சொல்லப்பட்ட குறிகளே முக்கியமாகவும், அடிக்கடியும் தோன்றுவதாக இருக்கும்.

ஆனல் சிடுமூஞ்சித்தனமும் கோபமும் அதிகம் ஏற்படாமல், நன் வியாதியைப்பற்றிய கவலேயும் வியாகூலமும் மாத்திரம் இருக்குமாயின் நாம் ***ஆரம், நேட்ரம்மூர்*** முதலிய ஔஷதங்களின் குறிகள் ஒத்திருக்கின்றனவா வென்று கவனிக்க வேண்டும். இம்மாதிரியான நரம்பு சம்பந்தமுள்ள மனக் குறிகள் ஔஷதத்தைத் தேர்ந்தெடுப்பதில் நல்ல உதவி செய்யும்.

"அடிக்கடி வெளிக்குப் போகத் தூண்டுதல். சிறிது சிறிதாகப் போதல்; சில சமயம் போகாமலும் இருத்தல்."

இது மிகவும் முக்கியமான குறியாகும். வேறு சில ஔஷதங்களிலும் இக்குறி உண்டு, ஆனல் இந்த ஔஷதத்தில் உள்ளதுபோல வேறு எந்த ஔஷதத்திலும் இக்குறி இவ்வளவு நிச்சயமாகவும் நிரந்தரமாகவும் இருப்பதில்லே.

மலபந்தத்தில் ***நக்ஸ்வாமிகா*** கொடுக்கப்படவேண்டியதற்கு இது வழிகாட்டுவதாகும். என்னுடைய அனுபவத்தில் இக்குறி இருந்தால்தான் இது வேலே செய்யும்.

இக் குறியைப்பற்றி கரோல் டன்ஹம் என்பவர் சுமார் இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் எழுதினர். அவர் கூறியதாவது: மலபந்தத்திற்கு ***நக்ஸ்வாமிகா***வும், ***பிரயோனியா***வும் சமமான ஔஷதங்களாக இருந்த போதிலும் அவை இரண்டில் எதைக் கொடுப்பது என்று தடுமாறுவதற்கோ, அல்லது அவைகளே மாற்றி மாற்றிக் கொடுப்பதற்கோ அவசியமில்லே; ஏனெனில் அவைகளின் குறிகள் வித்தியாசமானவை. ***நக்ஸ்வாமிகா***வில் ஏற்படும் மலபந்தம், குடலின் தள்ளிக்கொடுக்கும் சக்தி தாறுமாருக இருப்பதால் ஏற்படுகின்றது. ஆகவே அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுகிறது. ஆனல் ***பிரையோனியா***வில் ஏற்படும் மலபந்தம் குடலில் ஏற்படவேண்டிய நீர்க்கசிவுகள் சரிவர இல்லாமல் ஏற்படுகின்றது. ***பிரையோனியா***வில் மல வெளியேற்றம் ஏற்படவேண்டுமென்ற உணர்ச்சியே இருக்காது; வெளியேற்றப்படும் மலமும் தீயினல் சுட்டதுபோல கெட்டியாகவும் வரண்டும் இருக்கும்.

மேலே கூறிய குறி மலபந்தத்தில் மாத்திரம் காணப்படுவது அல்ல. இது சீதபேதி (Dysentery) யிலும் காணப்படும். இவ்வியாதியில் மலம் குழகுழப்பான சீதமும், அத்துடன் இரத்தம் கலந்தும் இருந்தாலும், ஒவ்வொரு தடவையும் மிகவும் குறைவாகவும், திருப்தி அளிக்காததாகவும் இருக்கும். டாக்டர் P. P. வெல்ஸ் என்பவர் சீதபேதியில் ***நக்ஸ்வாமிகா***விற்கு மற்றுமொரு குறியையும் குறிப்பிட்டிருக்கிறர். அதாவது வலிகள் ஒவ்வொரு தடவை மலம் வெளியேறிய பிறகும், மிகவும் குறைந்த காலத்திற்குச் சமனப்பட்டிருக்கும். ***மெர்கூறியஸ்*** என்ற ஔஷதத்தில் இது அப்படி இல்லே, வலியும் கடுப்பும் மலம் வெளியேறிய பிறகும் இருந்துகொண்டே இருக்கும்; இதை வியாதியஸ்தர்கள், எப்பொழுதும் முடிவில்லாததுபோலவே இருக்கிறதாகத் தெரிவிப்பார்கள். ஆனல் வியாதியஸ்தர்

அவஸ்தைப்படுவது மலபந்தமானுலும், சீதபேதியானுலும், வயிற்றுப் போக்கானுலும், வேறு எந்த வியாதியாக இருந்தபோதிலும், இவ்வாறு அடிக்கடி மலம் வெளியேறும் தூண்டுதல் இருக்குமாயின், நாம் **நக்ஸ் வாமிகாவை** நினைந்து, வேறு எதிர்க்குறிகள் இல்லாத வரையில் இதைக் கொடுக்கலாம்.

"மாதவிடாய் சில தினங்கள் முந்தியே வந்து விடுதல், அதிகமா யிருத்தல் அல்லது பல நாட்களுக்கு நீடித்தல்; முதலில் உபத்திரவத் துடன் ஆரமபித்தல், இந்த உபத்திரவம் நீடித்து இருந்து மாதவிடாய் நின்றபிறகு தான் விடுதல்."

இதுவும் **நக்ஸ்வாமிகாவில்** அடிக்கடி கண்ட குறியாகும். சீக்கிரமாக வும் ஏராளமாகவும் தோன்றும் மாதவிடாய்க்கு மற்றும் பல ஒளஷதங்கள் இருக்கின்றன வென்பது உண்மையே. ***கல்கேரியா கார்ப்*** இதற்கு ஒரு முக்கியமான ஒளஷதமாகும், ஆனல் ***கல்கேரியா*** வியாதியஸ்தரின் சுபாவம் ***நக்ஸ்வாமிகா*** சுபாவத்திற்கு முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. இந்த நிலைமைக்கு ***நக்ஸ்வாமிகா*** தேவைப்படும் வியாதியஸ்தர் ***பல்ஸடில் லாவைச்*** சாப்பிடமுடியாது என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். உதாரணமாக வியாதியஸ்தருக்கு கெட்டியான, காரமற்ற, பச்சைநிறமுள்ள போக்கு இருக்கிறதென்று ***பல்ஸடில்லா*** கொடுத்துவிட்டால், மாதவிடாயை மேலும் அதிசீக்கிரமாகவும், மிகவும் அதிகமாகவும் வெளியேற்றிவிடும். ஆகவே இம்மாதிரியான கேசுகளில் நான் ***செபியா*** கொடுக்க வேண்டி வரும். இது மேற்படி போக்கிற்கு ஒரு ரகைஷபோல் வேலை செய்வதுடன், மாதவிடாயை அதிகப்படுத்தாமலுமிருக்கும்.

இம்மாதிரி ***நக்ஸ்வாமிகா*** தேவைப்படுவது. சிறு பெண்களிடையேயும் மாதவிடாய் நிற்குங்காலத்திலுள்ள ஸ்திரீகளிடையேயும் தென்படும். இக் கேசுகளில் இவ்வௌஷதத்திற்கே தனியாக உள்ள மலப்பைக் கோளாறு களும் இருக்கும். ***(வில்லியம் டிக்ரினம்)*** வழி கீழே அமுக்குவதாகவும், மலப்பை வரையிலும். சில சமயம் நீர்ப்பையின் கழுத்து வரையிலும் செல்லு வதாகவும் இருப்பதுடன், அடிக்கடி மலம் வெளியேற வேண்டும்போலவும், அல்லது சிறுநீர் விடத் தூண்டியும் விடும். ஒரு வேளை ***நக்ஸ்வாமிகா*** 200 கொடுபட்ட பிறகு இவை சீக்கிரமாக நிவர்த்தியாகி விடும்.

இதைத் தவிர இந்த மாதவிடாய் அதிகப் போக்குள்ள வியாதியஸ்த ருக்கு, சீரணக் கோளாறுகளும். மலபந்தமும் இருந்து, அத்துடன் காலை நேரங்களில் உபாதிகள் அதிகமாயும் காணப்பட்டால் ***நக்ஸ்வாமிகா*** அனேகமாக ஒரு நிச்சய நிவாரணியே ஆகும்.

"காலையில் தூங்கி எழுந்தவுடன் கோளாறுகள் அதிகமாயிருத் தல், (லாச்சஸிஸ், நேட்ரம் மூர்) மன உழைப்பிற்குப் பிறகு

(நேட்ரம் கார்ப்)—*தலைச்சுற்றல், கல்கேரியா ஆஸ்ட், சிலிகா,—பிடறியில்): ஆகாரம் உண்டபிறகு (அனகார்டியத்திற்கு எதிர்) குளிர் காற்றில் (பல்ஸடில்லாவிற்கு எதிர்)''* போனிங்ஹாஸன் என்பவர் வேறு ஒன்றும் செய்யாமலேயே, அவர் புத்தகத்திலுள்ள ஒரு அத்தியாய மாகிய உபாதிகள் எதனால் அதிகமாகின்றன, எதனால் சமனமடைகின்றன வென்பதை மாத்திரம் எழுதியிருந்தால்கூட, அதுவே அவரை நாம் போற்று வதற்குப் போதுமானதாக இருக்கும்.

அவைகளினால் சென்ற முப்பது வருடங்களாகப் பலன் அடைந்து விட்டபிறகு, அவைகளைப்பற்றி இதைவிட நான் வேறு என்ன சொல்ல முடியும்?

ஆனால் சிலர் சொல்லுவார்கள், ''*அல்லென்ஸ் போனிங்ஹாஸனில்* உபாதிகள் காலையில் அதிகமாதல் என்னும் தலைப்பில் கொட்டை எழுத்துக் களில் இருபத்தி எட்டு ஔஷதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே? ஒரு ஔஷதத்தைத் தேர்ந்தெடுப்பதில் இது எவ்வளவு தூரத்திற்கு உபயோகப்படும்'' என்று.

ஆனால் இதேபோல மாலை நேரங்களில் உபாதி அதிகமாகும் ஔஷதங் களைக் கவனிப்போமானால் இதில் முப்பத்து எட்டு ஔஷதங்கள் இருப் பதைக் காண்போம். எட்டு ஔஷதங்கள் தான் காலை மாலை இரு வேளை களிலும் உபாதி அதிகமாவதாகக் காண்கின்றது தவிர இந்த எட்டு ஔஷதங்களில அவ்வாறு ஏற்படும் உபாதி அதிகம் பொதுவாக இல்லாமல் ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் இருக்கிறது. உதாரணமாக, *ரஸ்* என்ற ஔஷதத்தில் களகளத்த (Loose) இருமல் காலையில் கடுமையாக வும், பிடிப்புள்ள வறண்ட இருமல் மாலை நேரங்களில் கடுமையாகவும் இருக்கின்றது.

ஆகவே இம்மாதிரியாகப் பார்க்குமளவில், ஒரு ஔஷதத்தைத் தேர்ந் தெடுப்பதற்கு வழி சரியாய்த்தான் இருக்கிறது என்பது தெரியவரும். இப்பொழுது *நக்ஸவாமிகா*வின், எல்லா உபாதி அதிகங்களையும் எடுத்துக் கொண்டோமானால்; அதாவது காலம், மனம், சீரணம் (குறிகள்) சரீரச்சூடு முதலியவை, இம்மாதிரியான ஒரு கூட்டை இவ்வளவு பிரதானமாக வேறு எந்த ஔஷதத்தின் கீழ் காணமுடியும்? ஆனால் சரீரத் தசை மாறுதல் களைத் தவிர வேறு ஒன்றையும் பொருட்படுத்தாத வைத்தியர்களுக்கு இந்த சுபாவக் குறிகள் பிரயோஜனமற்றவையாகத் தோன்றும். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம், அவர்கள் இந்தக் குறிகளை கவனிக்காவிட்டால் நல்ல ஹோமியோபதி டாக்டராக இருக்க முடியாது.

''அதிகச் சூடு, சரீரம் முழுவதும் சூட்டினால் எரிதல்; முக்கியமாக முகம் சூடாகவும் சிவந்தும் இருத்தல், எனினும் வியாதியஸ்தர் அசையவோ போர்வையைச் சிறிதளவு அகற்றவோ முடியாம லிருப்பார். ஏனெனில் அவ்வாறு செய்தால் குளிர் எடுக்கும்,''

இம்மாதிரியான சுரம் அவ்வப்போது காணப்படும். இது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வண்ணம் நக்ஸ்வாமிகாவிற்குப் படிந்தும் விடும். சுரம் ஏதாயிருந்தாலும் பரவாயில்லை, தாபித சுரமானாலும், ஏறி இரங்கும் சுரமானாலும், தொண்டை இரணம், கீல்வாதம், அல்லது வேறு எங்கு உபத்திரவம் தோன்றி அதனால் ஏற்பட்ட சுரமானாலும், மேலே காட்டிய இக்குறிகள் இருக்குமாயின், இந்த மருந்தை நம்பிக் கொடுக்கலாம்; அது வேலை செய்வதில் நமக்கு ஏமாற்றம் உண்டாகாது. இந்தக் குறியின் உயர்வைக் கற்றுக்கொள்ள எனக்குப் பல வருடங்கள் பிடித்தன, ஏனெனில் ஆதிகாலத்தில் நான் குறிப்பாக சில ஔஷதங்களை உபயோகிப்பவனாக இருந்தேன். அதாவது எல்லாக் கடுமையான சுரங்களிலும் *அகோனைட்டையும் பெல்லடோன்னாவையும்* மாற்றி மாற்றிக்கொடுப்பது நல்லதென நினைத்திருந்தேன். ஆகவே, சரியான போதனை செய்யப்படாத இளம் ஹோமியோபதியர்களிடம் எனக்குச் சற்று அனுதாபம் இருக்கிறது. ஆனால் அவர்களைப் போன்றவர்களின் நன்மைக்காக, வேறு ஒரு நல்ல வழி இருககிறது என்பதை இங்கு கூற விரும்புகிறேன். அதாவது, "ஒவ்வொரு கேசின் குறிகளையும் நன்கு கவனித்துப் பிரிப்பது—இது எப்பொழுதும் கஷ்டமானதல்ல—ஒரே ஔஷதத்தை (வீரியப்படுத்தியது)—கொடுப்பது; அது வேலை செய்யப் போதிய அவகாசம் அளிப்பது, அதை மறுபடி கொடுப்பதற்கு முன் அதன் வேலையைச் செய்ய விடுவது."

குறைந்த வீரியங்களும் அனேக சந்தர்ப்பங்களில் வேலை செய்யும், தவிர மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுத்தாலும், அதிகமாகக்கொடுத்தாலும், அடிக்கடி கொடுத்தாலும் கூட வேலைசெய்யும். ஆனால் மற்றும் அனேக சந்தர்ப்பங்களில் அவை வேலைசெய்யாமல் போனாலும் போகும். எப்படியும் உயர்ந்த வீரியத்தில் சரியான ஔஷதம், ஒரே ஔஷதம், குறைந்த அளவில் கொடுத்து வேலைசெய்வதைப்போல் வேறு எதுவும் இருக்க முடியாது.

ஆகாரம் உட்கொண்டபின் (காலீ, பை, நக்ஸ் மாஸ்சாடா) புளிப்பு ருசி, அதன் பிறகு ஒன்று அல்லது இரண்டுமணி நேரங் கழித்து வயிற்றில் கனம், வாயில் நீர் ஊறுதல், இடுப்பைச் சுற்றிலும் இறுக்க உணர்ச்சி, அதனால் துணியைத் தளர்த்தவேண்டி வருதல், (லக்கஸிஸ், கல்கேரியா, லைகோபோடியம்) குழப்பம் ஆகாரத்திற்குப் பிறகு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு மனதினால் யாதொரு வேலையும் செய்யமுடியாது. மேல்வயிறு உப்புதல் அத்துடன் கல்போட்டது போன்ற கனம்.

இவை "வழிகாட்டுக் குறிகள்" என்பவற்றில் முக்கியமானவை. இம்மருந்தின் கீழ் சீரண அவயவங்களுக்குப் பல குறிகள் கொடுத்திருப்பதால், சீரணக்கோளாறுகளில் *நக்ஸ்வாமிகா* நல்ல வேலைசெய்யும் என்று

ஆகிறது. ஆகவே இதில் விசேஷமான குறிகள் என்று ஒன்றையும் சொல்லுவதற்கில்லை. அப்படியே சொல்லுவதாயின், ***நக்ஸ் மாஸ்சாடா, காலீ பைக்ரோமிகம்*** முதலியவைகளைப் போல உண்ட உடனே வலி ஆரம்பிக்காமல். "உண்டு ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களுத்குப் பிறகு" வலி ஏற்படுவது கவனிக்கப்படலாம். வயிற்றில் கல் போட்டதுபோல கனமாய் இருப்பது ***பிரையோனியா***விலும், ***பல்ஸடில்லா***விலும் காணப்படுகின்றது.

அன்னப்பை, கல்லீரல், வயிறு இவைகளில் உபாதிகள் ஏற்படுவதின் காரணத்தை ஒட்டி ***நக்ஸ்வாமிகா*** ஔஷதமாக உபயோகப்படுகின்றது. உதாரணமாக, காப்பி, போதை தரும் வஸ்துக்கள், பெருந்தீனி சில ஔஷதங்களை அதிகமாக உட்கொண்டிருத்தல், தொழிலைப் பற்றிய கவலைகள், உடல் உழைப்பில்லாத வாழ்க்கை, இரவு கண் விழிப்பு ***(காக்குலஸ், குப்ரம் மெட், நைஸிட் ஆஸிட்) சுகவாழ்வு*** முதலியவை. ஆகவே இக்காரணங்களினால் ஏற்படும் கோளாறுகளுக்கு ***நக்ஸ்வாமிகா*** நல்ல ஔஷதமாகும். இது அனுபவத்தில் கண்டுகொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்தக் கேசுகளில் ஒரு விஷயம் முக்கியமாக இருந்தே தீரும்; அதாவது இதற்கே விசேஷமாகவுள்ள மலப்பைக்குறிகள்.

இது தலைவலி, இடுப்பு வலி இவைகளில் நல்ல பலன் அளிக்கும் என்பதைக் குறிப்பிடாமல் ***நக்ஸ்வாமிகா***வை முடிக்கக்கூடாது.

தலைவலி, சிரணம், வயிறு, மூலம் இவைகளின் கோளாறுகளுடன் கூடவே இருக்கும். இங்கே கூட வலியின் தன்மையைவிட வியாதியஸ்தரின் 'சுபாவம்' தான் ஔஷதத்தை நிர்ணயம் செய்ய உதவும். வலி அதிகமாவது, மன உழைப்பு, கோபம், திறந்தவெளிக் காற்றில் (***பல்ஸடில்லா***வுக்கு எதிர்) காலையில் தூங்கி எழுந்தவுடன், உண்டபிறகு, காப்பியும், போதைதரும் பானங்களும் அதிகம் உட்கொண்டபிறகு வயிற்றுப் புளிப்பு, சூரிய வெய்யிலில், குனிவதினால் அதிக வெளிச்சம் சப்தம் முதலியவை, கண்களை அசைப்பதினாலும், திறப்பதாலும் (***பிரையோனியா***) இருமுவதால், அதிகமாக வாசனையுள்ள ஆகாரங்களை உட்கொள்ளுவதால், புயலடிக்கும் காலம், அதிக ஔஷதம் உட்கொண்ட பிறகு, முட்டிமைதுனம், மலபந்தம், அல்லது மூலஉபத்திரவம் முதலியவைகளினால் இருக்கலாம்.

தலைவலி தலையின் ஒரு பக்கத்திலோ, அல்லது தலை முழுவதிலுமோ இருக்கலாம். வியாதியஸ்தர் ஒவ்வொரு தடவை ஒவ்வொரு இடத்தைக் காட்டுவதுடன், அனேகமாகத் தலை முழுவதுமே வலிப்பதாகக் கூறுவார்.

முதுகுவலி இதைவிட விசேஷமாக இருக்கும். படுத்திருக்கும்போது முதுகில் வலி இருக்கும், திரும்பவேண்டியிருந்தால் உட்கார்ந்து திரும்புதல்

ஏனெனில் சரீரத்தைத் திருப்பினல், வலி அதிகமாகும். தவிர நிற்பதிலும் (**ஸல்பர்**) (உட்காரும்போது அதிகமானல்: ***கோபால்ட், பல்ஸடில்லா, ரஸ்டாக்ஸ், ஸிங்கம்***) உட்காருவதும் வலியை அதிகப்படுத்தும். வலி அனேகமாக இடுப்பில் (Lumbar region) இருக்குமென்றுலும் மேல் முதுகிலும் (Dorsa) இருக்கலாம், தவிர இவ்வலி (***எஸ்குலஸ் ஹிப்போல***) மூல முளைகள் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். ***எஸ்குலஸ்*** வலிகள் நடப்பதாலும் குனிவதாலும் அதிகமாகும். முட்டிமைத்துனத்தால் ஏற்படும் முதுகுவலிக்கு (***கோபால்ட்*** < உட்காருதல்; ***ஸ்டாபிஸாக்ரியா***, இரவு படுக்கும்போது) ***நக்ஸ்வாமிகா*** ஒரு நல்ல ஔஷதம். இங்கே ***நக்ஸ்வாமிகா***விற்கு முள்ளந்தண்டிலும், மோட்டார் உணர்ச்சி நரம்புகளிலும் எப்படி வேலை செய்யும் என்பதை விரிவாகக் கொடுக்கலாம். ஆனல், அவை மற்ற எல்லாப் புத்தகங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்பொழுது ***நக்ஸை*** இனி வேறு மருந்துகளைப்பற்றி எழுதும்போது ஒப்பிடுவதை மாத்திரம் வைத்துக்கொண்டு விட்டு விடுவோம். நாம் மேலே எழுதியதைக்கொண்டு இப்பெரிய ஔஷதத்தின் குணங்களை மிகவும் குறுக்கி விட்டோம் என்று சிலருக்குத் தோன்றலாம். ஆனல் நமது எண்ணம் ஒவ்வொரு ஔஷதத்தைப் பற்றியும் விரிவாக எழுதுவது அல்ல; ஆனல் ஒவ்வொரு ஔஷதத்தின் முக்கிய குறிகளைப்பற்றி எழுதுவதே ஆகும். இவைகளைச் சுற்றிதான் மற்றக்குறிகளும் வரும். இதைவிட விரிவாக எழுதுவது ஒரு முழு மெட்டீரியா மெடிகாவை எழுதுவதே ஆகும்.

அனுபவத்தில் ஒவ்வொரு வைத்தியனிடையேயும் இரண்டு விதமான வியாதியஸ்தர்கள் வருகின்றுர்கள். ஒருவித கேசுகளில் விசேஷமாகவும் அபுருபமாகவுமுள்ள குறிகள் பிரதானமாகத் தோன்றுவதால் நிச்சயமாகப் பலன் அளிக்கக்கூடிய ஔஷதத்தை உடனே தேர்ந்தெடுத்துக் கொடுத்து விடலாம். மற்றய விதத்தில் அம்மாதிரியான குறிகள் தென்படா. அப்பொழுது நாம் செய்யக்கூடிய காரியம் ஒன்றுதான். அந்த வியாதியஸ்தரின் முழுக்குறிகளுக்கும் ஒத்த ஔஷதத்தைக் கண்டுபிடிப்பது. எனினும் பெருவாரியான கேசுகளில் ஏதாவது சில முக்கிய குறிகள் தென்பட்டே தீரும்; இவைகளைக் கொண்டு அந்த முழுக்கேசையும் கவனித்து ஔஷதத்தைத் தேர்ந்தெடுக்க முடியும்.

புத்தகம் வரவு

"வைத்திய மலர்" வைத்திய சம்பந்தமான மாத வெளியீடு. வருட சந்தா ரூ. 3—8—0. தனிப்பிரதி 0—5—0. வைத்திய மலர் காரியாலயம், 210, தெற்கு மாரட்டு வீதி, மதுரை.

வைத்திய மலரின் முதலாவது இதழ் (ஜூன் 1952) வரப்பெற்ருேம். நமது இந்திய வைத்தியம் சம்பந்தமாக ஒரு நல்ல மாசிகை நம் நாட்டிற்குத் தற்சமயம் மிகவும் அவசியமானது. இந்த நவீன விளம்பரக்காலத்திலே நமது புராதன வைத்தியக் கலைக்குச் சரியான விளம்பரமில்லாமலே, இதைப்பற்றி ஜனங்கள் அறிந்து கொள்ளாமல், இதன் எதிரிகளால் பரப்பப்படும் ஆதாரமற்ற வதந்திகளைக்கொண்டே இந்திய வைத்தியத்தை அளவிட ஆரம்பித்துவிடுகின்றனர். இந்த சூழ்நிலையில் மதுரை சித்த வைத்திய சங்கம், இந்த மாசிகையை ஆரம்பித்து இருப்பது வரவேற்கத்தக்க விஷயமாகும்.

இந்த இதழில் திருவாரூர் வைத்திய வள்ளல் ஜி. கண்ணுச்சாமி பிள்ளையவர்கள் எழுதிய நடமாடுங்கோயில் திருப்பணி என்ற கட்டுரையும் மற்றும் பல அறிஞர்களின் கட்டுரைகளும் இருக்கின்றன. குறிப்பாக இந்திய வைத்தியர்களுக்கும், பொதுவாக வைத்தியத்தில் ஆர்வமுள்ள பொதுஜனங்களுக்கும் இது உபயோககரமாக இருக்கும்.

டாக்டர் மூர்த்தியின்

"கோல்டுராப்ஸ்"

[காச நிவாரணி]

பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3–12–0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்

நெல்லை ஜில்லா ஹோமியோபதியர்களுக்கு வேண்டுகோள்

சகோதர சகோதரிகளே! வணக்கம்.

நம் தமிழ் நாட்டிலும் சில ஜில்லாக்களில் நம்மவர்கள் ஒன்றுகூடி ஜில்லா ஹோமியோபதிக் அஸோஸியேஷன்களை நிறுவி வருங்கால வாழ்வினை உருவாக்க வேண்டுவன செய்து வருகின்றார்கள் என்பது உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்கு தெரிந்ததோர் விஷயம்.

ஆயினும் இதுகாரும் நம் திருநெல்வேலி ஜில்லாவில் நாம் அனைவரும் இது விஷயத்தில் பொருப்பற்றவர்களாய், விருப்பற்றவர்களாய் வாளாயிருப்பது மிகவும் வியக்கத்தக்க விஷயமன்றோ?

மேலும் நம் நெல்லை ஜில்லாவில் ஒரு ஜில்லா ஹோமியோபதிக் அஸோஸியேஷனை நிருவ நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்வருவோமாக. தங்கள் விலாசத்தை 30—9—1952-ற்குள் நமக்குக் கிடைக்க அனுப்பிவைக்கத் தவராதீர்கள். நம்மவர்களின் இன்றய நிலைமை உங்கள் அனைவர்க்கும் நன்கு தெரிந்ததே. உங்கள் யாபேர்களுடைய கடிதங்கள் கிடைத்தவுடன் அறிக்கை மூலம் எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஒரு இடத்தில் முதல் கூட்டத்தைக் கூட்டி அஸோஸியேஷனை நிறுவவும், பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் முற்படுவோமாக. "ஹோமியோபதி" சந்தாதார்கள் அல்லாதவர்களுக்கு இதைக் கண்ணுரும் நீங்கள் இது விஷயத்தை சிரமத்தைப் பொருள்படுத்ாது சென்று எடுத்துக்கூறி நமக்குத் தகவலளிக்கவேண்டுவன செய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

உங்கள் அன்பிற்குறிய,

டாக்டர் எஸ். ஆர். பி. துரைப்பாண்டியன்,

எம். ஐ. எச்., எம். டி. எச். (ஹோமியோ)

சுரண்டை P. o., தென்காசி தாலூகா,

திருநெல்வேலி ஜில்லா.

கேள்வியும்—பதிலும்

"ஹோமியோபதி மருந்துகளை வீர்யப்படுத்துவதிலும் பயோ கெமிஸ்டிரி மருந்துகளை வீர்யப்படுத்துவதிலும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?

ஹோமியோபதி வைத்தியமுறையில குறைந்த வீர்யங்களில் அனேக மருந்துகள் மது சாரத்திலேயே வீர்யப்படுத்தப்படும். அதன்பின் பெரிய வீர்யங்களையும் அப்படியே செய்யப்படும். ஆனால் சில மருந்துகள் அதாவது தண்ணீர் அல்லது மது சாரத்தில் கரைக்கமுடியாத சில ஒளஷதங்களை முதலில் அரவையில் அறைத்து பிறகு பால் சர்க்கரை மாவுடன் (Sugar of milk) சேர்த்து வீர்யப்படுத்தி ஒரு ஆறு வீர்யத்திற்குமேல் திரவ ரூபமாக வீர்யப்படுத்துவது வழக்கம். ஆனால் பயோகெமிஸ்டிரி வைத்திய முறையில் எல்லாவற்றையுமே அறைத்து வீர்யப்படுத்துவதுதான் முறை. இந்த அளவில் இவைகளுக்கு வீர்யப்படுத்தும் முறை வித்தியாசப்படுகிறது. தவிர, பயோகெமிஸ்டிரி முறையில், எல்லாம் தசாமச வீர்யங்களாகவே செய்யப்படும். ஹோமியோபதி முறையில் இருவித (தசாம்சம், சதாம்சம்) வீர்யங்களிலும் செய்யப்படுகிறது.

ஹோமியோபதி வைத்தியசாலை திறப்பு

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் மாணவர் ஸ்ரீ S. அருணாசலம் பிள்ளையின் '**மோஹன் ஹோமியோ வைத்தியசாலை**'யை சென்ற 14—7—52 அன்று ராசிபுரத்தில் பிரபல காங்கிரஸ்காரர் ஸ்ரீ M. பெரியசாமி அவர்கள் திறந்து வைத்தாராம்.

Edited, Printed & Published by Dr. V. R. MURTY, at the Homoeopathy Press Homeo House, Kumbakonam.